1975 ஏப்ரல் 18]

நான் பேசுகின்ற நேரத்தில் அமைச்சர்களுக்கு மட்டும் மானம் ரோஷம் உண்டு மற்றவர்களுக்கு இல்லையா என்று கேட்டிருந்தேன். பத்திரிகையில் அது வெளி வந்திருக்கிறது. ஆனால் அது ப்ரொசீடிங்சில் இல்லை. பேசுகின்ற நேரத்தில் அது எக்ஸ்பஞ்ச் செய்யப்படும் என்று சொல்லியிருந்தால் நான் வருத்தப்படப் போவது இல்லை. அல்லது என்னையே கேட்டிருந்தால் கூடத் திரும்ப பெற்றுக்கொண்டு இருப்பேன். இது பத்திரிகையில் வந்து விட்டது. ப்ரொசீடிங்சில் இல்லை. இது போன்ற சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளுக்குச் சங்கடங்கள் வந்து விடுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிவான உங்கள் உரையைத் திருத்த உங்களுக்குக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கிற நேரத்தில் ஏதாவது விடுபட்டு இருந்தால் அதை எழுதி அனுப்பலாம். அது தான் முறை.

(4) நடைமுறைக் கேள்விகள்

(அ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகளை எடுத்துக்கொள்வதில் ஏற்படும் காலதாமதம் குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்ற 41-வது விதிமுறையின் கீழ் உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்து வருகிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானங்களை ஒத்திவைப்பு தீர்மானங்களைப் போன்று அவசர காரியங்களுக்காக உறுப்பினர்கள் கொண்டு வருகிறார்கள். என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் 19—2—75 அன்றைக்கு, அதாவது இரண்டு மாதத்திற்கு முன்னால் கொடுத்தார். 60 நாட்கள் முடிந்து விட்டன. நம்முடைய விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆதித்தனார் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொடுத்து இருந்தார்கள். இன்னும் அவர் தன்னுடைய துறையிலிருந்து பதிலைப் பெற முடியவில்லை என்றால் அவர் அமைச்சர் வேலை பார்க்கிறாரா அல்லது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் வேண்டாம். பதில் வரவில்லை என்று சொல்லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: இரண்டு மாதமாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய துறைக்கு வெளியே உள்ள காரியங்களை எல்லாம் வேகமாகப் பார்க்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வரவில்லை என்று நிறுத்திக் கொள்ளுங்கள். மற்றது எல்லாம் வேண்டாம். அது முறை இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : 19—2—75 அன்று கொடுத்தது. இன்றைக்கு 18—4—75. 60 நாட்கள் முடிந்து விட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் துறையிலிருந்து என்ன, எது என்று கேட்டு இரண்டு மாதமாகப் பதில் சொல்ல முடியவில்லை. சட்டமன்றம் நாளையோடு முடியப்போகிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால் எந்த அளவு முக்கியத்துவம் உள்ளது என்று தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். நான் சொல்லுவது எல்லாம் சட்டமன்ற விதிமுறை களை ஏற்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கலாம் என்று இருக்கிறதே அதற்கு ஒரு வரம்பு லிமிடேஷன் ஏன் இல்லை. நான் கூட ஒரு ஷார்ட் நோட்டிஸ் கொஸ்டின் கொடுத்து ஒரு மாத மாகிறது. ஒரு வாரத்திற்கு முன்னால் அது அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. நாளையோடு சட்டமன்றம் முடியப்போகிறது. அது ஒன்றும் இல்லை. சாதாரண விஷயம். ஒரு பாலம் சம்பந்தமானது. திருநெல்வேலியில் உள்ள பாலம் சம்பந்தமானது. ஊருக்குப் போனால் நாங்கள் பொது மக்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன் கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றி அமைச்சர் அவர்களிடம் நான் பேசினேன். இன்னொரு துறையிடமிருந்து பைல் பெற வேண்டிய நிலை இருக்கிறது. விரைவில் அதைப் பெற்று அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்பதற்கு முன்னால் நீண்ட நாளைக்கு முன்பே அமைச்சரிடம் இது பற்றி கூறியிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : திரு. எட்மண்ட் அவர்கள் 41-வது விதி முறையைக் குறிப்பிட்டு இப்போது சொல்லியிருக்கிறார்கள். இதைப் போல எல்லா அங்கத்தினர்களும் கொடுத்து இருக்கிறார்கள். சட்ட மன்றம் இன்னும் ஒரு நாளைக்குத்தான் இருக்கிறது. கூடிய வரை 41-வது விதிமுறையின் கீழ் கேட்டு இருக்கிற அத்தனைக்கும் அமைச்சர் அவர்கள் பதில் கூறினால் மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் குறிப் பிட்டது போல நாங்கள் ஊருக்குப் போனால் மக்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும். ஆகவே, முடிந்த அளவு நாளைய தினமாவது பெண்டிங்காக இருக்கிற அத்தனைக்கும் பதில் கூற வேண்டும் என்று அமைச்சர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல் 41-ஐப்பற்றிச் சொல்லிவிடு கிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது எல்லாம் அமைச்சர்களின் கருத்துக்கு வரும். விரைவில் அறிக்கை வரும்படி மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் துறைக்கு ஆணையிட்டால் நலமாக இருக்கும்.

(5) உரிமைப் பிரச்சினை.

மது உரிமைக் கட்டணத்தைக் குறைத்தது பற்றி பேரவையில் அறிவிக்காது நிர்வாக முறையில் அரசு ஆணையாகப் பிறப்பித்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்று காலை ஒரு ப்ரிவிலெஜ் மோஷன் உங்களிடம் கொடுத்து இருக்கிறேன். ஆனால், நீங்கள் அனுமதி மறுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அது அனுமதி மறுப்பதற்குரிய விஷயம் இல்லை. அந்த ப்ரிவிலெஜ் மோஷன் இந்த மாமன்றத்திற்கு முன்னால் சமர்ப்பிக்க வேண்டியது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுத்து விட்ட பிறகு, மறுபடியும், மறுத்து இருக்கிறீர்கள், மறுக்கக் கூடியது இல்லை என்று சொன்னால் இது எப்படி முறை என்று எனக்குத் தெரியவில்லை. இது பற்றி இந்தத் தொடர் கூட்டத்தில் பல முறை பேசி இருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களுக்கும் சில உறுப்பினர்களுக்கும் இதில் ஒரு முக்கியமான முரண்பாடு. இந்த பிரிவிலெஜ் சம்பந்தமாக ஒரு ப்ரையர் சாங்கஷன் தேவை இல்லை என்பது நம்முடைய நிலை. விதியில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியில் தெளிவாக இருக்கிறது. இது பற்றி கருத்தரங்கு வேண்டுமென்றாலும் நடத்திவிடலாம்.

திரு. கே. டி. கே.தங்கமணி : மற்ற மாமன்றங்களில் டிஸ்அலொ தான் செய்கிறார்கள். கொண்டு வரவே கூடாது என்று சொல்லுவது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ப்ரைமாபேசி கேஸ் இல்லை என்றால் என்ன செய்வது?